செ. வெ.எண்.673 நாள்:09.08.2010

# <u>சுற்றுலாத்துறையின் மூலம் சுற்றுலா வழிகாட்டிப் பயிற்சி</u>

தமிழ்நாடு பல்வகையான சுற்றுலாச் சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ள மாநிலம். இங்கு மனதில் நிற்கும் என்னற்ற சுற்றுலாத்தலங்கள் மற்றும் இயற்கையோடு இயைந்த சிறப்பம்சங்கள் உள்ளன. தமிழகத்திற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வருடத்திற்கு சாராசரியாக 24% அதிகரித்துள்ளது. தற்போது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழகம் முதல் மாநிலமாகவும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தொடர்ந்து மூன்றாவது மாநிலமாகவும் விளங்குகிறது.

சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலா வழிகாட்டிப்பயிற்சி 2007 முதல் நடத்தப்பட்டு, இதுவரை சுமார் 300 நபர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்சிப்பயிற்சிக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்திற்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளதால் அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்குவதற்கும், சுற்றுலா தகவல் அளிப்பததற்கும் அதிகளவில் வழிகாட்டிகள் தேவைப்படுகிறார்கள். எனவே இதனை கருத்தில் கொண்டு புதிதாக சுற்றுலா வழிக்காட்டிகளுக்கு இந்த ஆண்டு இரண்டாம் கட்டமாக தமிழக சுற்றுலாத்துறை மூலம் வழிகாட்டிப் பயிற்சி நடத்தப்படவுள்ளது.

இப்பயிற்சி சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனத்தால் இரண்டு வார காலத்திற்கு நடத்தப்படும். மூன்று நாட்கள் களப்பயிற்சிக்கும் பயிற்சியாளர்கள் அழைத்துச்செல்லப்படுவார்கள். பயிற்சி முடிந்ததும் அவர்கள் விரும்புகின்ற இடத்தில் வழிகாட்டியாக அவர்கள் பணிபுரியலாம். இது அவர்களுடைய தனிப்பட்ட பணியாக இருக்கும்.

இதுதொடர்பாக செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு வழிகாட்டிப் பயிற்சிக்கு விண்ணப்பங்களை 15–8–2010 அன்றுக்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தற்போது அதிக அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுவருவதால், விருப்பமுள்ளவர்கள் தங்களின் விண்ணப்பத்தினை அளிக்க ஏதுவாக விண்ணப்பம் பெறும் கடைசி நாள் <u>**30.08.2010**ஆக நீட்டிப்பு செய்ய சுற்றுலாத்துறை முடிவு செய்துள்ளது</u>. விண்ணப்பத்தினை **இயக்குநர், சுற்றுலாத்துறை, தமிழ்நாடு சுற்றுலா வளாகம், வாலாஜா சாலை, சென்னை–600 002** என்ற முகவரிக்கு ''வழிகாட்டிப் பயிற்சிக்கான விண்ணப்பம்'' என்று உறையின்மேல் எழுதி அனுப்ப வேண்டும்.

**<u>வெளியீடு:</u>**

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.